## இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகம் - 2016

---

இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 09 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகச் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்த மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 144,214,218 கிரயத்திற்கான நிலையான சொத்துக்கள் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் 10 வருடங்களுக்கு முன்னர் வாடகைக்குப் பெற்றிருந்த காணி ஒன்றிற்காக காணி ஆணையாளர் நாயகத்தினால் 2016 ஏப்ரல் 28 திகதி கொடுப்பனவு பத்திரமொன்று வழங்கியிருந்ததுடன் அக் காணியின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியாகிய ரூபா 156,000,000 தொகையில் 10 சதவீதம் மாத்திரம் பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. மீதியாகிய ரூபா 140,400,000 தொகை மூலதன மானியம் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் காணியின் பெறுமதி ரூபா 15,600,000 தொகை என மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேலும் மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட காணிக்காக கடந்த 10 வருடங்களில் செலுத்தப்பட்ட மொத்த குத்தகையாகிய ரூபா 10,920,000 தொகையினை செலுத்த வேண்டிய தொகையில் இருந்து கழித்து மீதித் தொகை மாத்திரம் பணமாக செலுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக கடந்த 10 வருடங்களில் இலாபத்தில் இருந்து கழிக்கப்பட்டிருந்த ரூபா 10,920,000 தொகை மீண்டும் தடுத்து வைக்கப்பட்ட இலாபத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 2.3 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட உடன்படிக்கை முடிவடைந்து 04 வருட காலம் கடந்திருந்த 3 ஆய்வு செயற்திட்டங்களிலிருந்து நிறுவகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,903,969 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதே போல் மீதிகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அம் மீதியை உறுதிப்படுத்தியுமிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டு முதல் அரச அமைச்சு ஒன்றில் இருந்து பெற வேண்டியிருந்த ரூபா 1,147,747 இற்கான தொகையொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளாய்வாண்டின் போது அத் தொகையினை அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் என காட்டப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவக சட்டத்தின் 12(1) இன் பிரகாரம் நிறுவகத்தின் உதவி மற்றும் ஒத்துழைப்புடன் பெற்றுக்கொள்ள வேண்டிய கொள்கைகள் கற்கை வேலைத் திட்டம் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக ஆய்வு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 13,802,781 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,119,500 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,683,281 இற்கான வளர்ச்சியொன்றினைக் காட்டியது. வட்டி வருமானம் ரூபா 12,246,692 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வளர்ச்சியினை முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை மிகையொன்று காணப்பட்டதுடன் அது வருடாந்தத் தளம்பல் அடைந்து காணப்பட்டது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 70,650,200 தொகைக்கான நிறுவகத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா 91,151,651 தொகை வரை இடையறாது வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வாவு

## 4.1 செயலாற்றுகை

1988 இன் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைகள் கற்கை நிறுவகச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் செய்பணிகள் சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளன.

- தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மற்றும் கொள்கைகளுடன் தொடர்புடைய கற்கைகள் ஆரம்பித்தல், மேம்படுத்தல் மற்றும் நடாத்துதல்.

- அபிவிருத்தி கற்கைகளுடன் தொடர்புடைய அரசாங்க நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல்.
- சமூக பொருளாதார ஆராய்ச்சிகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் சமூக பொருளாதார ஆராய்ச்சிகளை நடாத்துதல்.
- வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் இலங்கையிலுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுடன் சேர்ந்து கற்கைகள், கருத்தரங்குகள் அல்லது கலந்துரையாடல்கள் நடாத்துதல்.
- பொருளாதார மற்றும் சமூக ஆராய்ச்சி தகவல்கள் மற்றும் ஏனைய உரிய விடயங்களை சேகரிப்பதற்காக களஞ்சியமொன்று நிறுவுதல்.

மேற்கூறிய செய்பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளின் மீது நிறுவகத்தினால் முழுப் பொருளாதார கொள்கையின் கீழ் விவசாயம் சார் அபிவிருத்தி, தொழிலாளர், வறுமை, சர்வதேச சேவைகள், சுற்றாடல் சார் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சுகாதார மற்றும் பொருளாதாரக் கொள்கைகளாக 06 பரப்புகள் அடங்கக் கூடிய விதமாக மீளாய்வாண்டின் போது 41 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த 41 ஆராய்ச்சி செயற்திட்டங்களில் கடந்த ஆண்டின் போது பூர்த்தி செய்ய முடியாதிருந்த 9 ஆய்வுகள் அடங்கியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள உள்ள 2015 ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த அவ் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்த 09 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருந்த போதிலும் அதன் மூலம் உழைப்பதற்கு எதிர்ப்பார்த்திருந்த வருமானம் ரூபா 10,222,109 தொகை எனினும் ரூபா 7,726,358 இற்கான வருமானம் மாத்திரமே உழைத்திருந்தது. மேலும் முன்னைய ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த ஆனால், மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்ய வேண்டியிருந்த 03 ஆராய்ச்சி செயற்திட்டங்களை மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்திருக்கவில்லை. அதன் மூலம் எதிர்ப்பார்த்த வருமானம் ரூபா 2,296,571 தொகையாகும்.

(ii) 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆண்டின் போது ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் வருமானம் 51 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் 2014 ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆண்டு வரை 59 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்ட வருமானம் ரூபா 40,000,000 தொகை எனினும், செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் உழைத்திருந்தது ரூபா 25,027,771 இற்கான வருமானம் எனப்படும் 62.5 சதவீதம் மாத்திரமேயாகும். எவ்வாறாயினும் நிறுவகத்தினால் எதிர்ப்பார்த்தவாறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டமை இதற்கு காரணமாக இருந்ததுடன் இந்த நிலைமையினை குறைப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என அவதானிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சமர்ப்பித்திருந்த செயலாற்றுகை அறிக்கையில் பௌதீக மற்றும் நிதி நிலைமை என்பன சமர்ப்பித்திருக்காமையால் நிறுவகத்தின் செயலாற்றுகையின் முன்னேற்றத்தை மதிப்பிட முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட 11 வகையான புத்தகங்களில் 3350 புத்தகங்கள் அச்சிடுவதற்காக ரூபா 1,220,326 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் 853 புத்தகங்களை விற்பனை செய்ததன் மூலம் ரூபா 728,525 இற்கான வருமானம் ஒன்று கிடைத்திருந்ததுடன் 1387 புத்தகங்கள் பிரபுக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தேவையினை உரியவாறு மதிப்பீடு செய்யாமல் அச்சிடப்பட்டிருந்தமையால் வெளியிடப்பட்ட புத்தகங்களில் 33 சதவீதம், அதாவது 1110 புத்தகங்களை விற்பனை செய்வதற்கு அல்லது வினியோகிப்பதற்கு முடியாமல் மீதியாகக் காணப்பட்டது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

பௌதீக ரீதியாக காணப்படாத பெறுமதி ரூபா 8,200,412 தொகைக்கான நிலையான சொத்துக்கள் பணிப்பாளர் சபையினதும் திறைசேரியினதும் முறையான அங்கீகாரம் இன்றி புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் இலட்சியங்களையும் சேவைகளையும் நிறைவேற்றுவதற்காக 03 வருடங்களை விட குறையாத காலத்திற்கான கூட்டிணைப்பு திட்டமொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவகம் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 5.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

## 5.3 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைகள் திட்டத்தில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,493,965 இற்கான அலுவலக உபகரணங்கள் மற்றும் கட்டிட நிர்மாண வேலைகள் என்பவற்றை உட்படுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தினால் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு** | | **அவதானிப்புக்கள்** |
| --- | --- | --- |
| (அ) | நிலையான சொத்துக்கள் | நிலையான சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்து மீள்மதிப்பீடு செய்யப்படாமை. |
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டம் | செயல் நடவடிக்கைத்திட்டம் காலத்திற்கு ஏற்றவாறு மதிப்பாய்வு செய்திருக்காமை. |
| (இ) | பெற வேண்டிய கடன் | நீண்ட காலக் கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |